அதிகாரிகளிடத்திலே கொடுத்திருக்கிறோம். அமைச்சரிடத்திலேதான் நேரடியாகக் கொடுக்க வேண்டுமென்ற அவசியம் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திராகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களைப் பழுது பார்ப்பதற்கென்றே சமூக நலத்துறையினுடைய இயக்குநர் அலுவலகத்தில் ஒரு பிரிவு வேலை பார்க்கிறது. அந்தப் பிரிவில் உறுப்பினருடைய கடிதங்கள் எதுவும் பெறப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

திரு. கோ. காளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெறப்படவில்லை என்றால் அதற்கு நான் பொறுப்பல்ல. நான் கடிதம் கொடுத்திருக்கிறேன் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே இருந்து எனக்கு பதிலுரையும் வந்திருக்கிறது. அதை இங்கே கொண்டுவரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசி முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் 2.01—லிருந்து 2.08 வரை 7 நிமிடங்கள் பேசியதில் யாரும் குறுக்கிடவில்லை. (குறுக்கீடு) திரு. காளன் பேசி முடித்ததாக அறிவிக்கப்படுகிறது.

பேரவையின் இன்றைய நிகழச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29-3-1995) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

77. 1993-94-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் பதினோறாவது ஆண்டறிக்கை. [1956-ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).